IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

OS No. 429/2023

**P.W.**1

Name : குமார்
Father/Husband Name : தனபால்
Place :
Calling :
Age :

Date : 15–04–2026

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.04.2026.

சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

2. நான் சிவில் கான்டிராக்டராக வேலை பார்க்கிறேன். நான் என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி என்னுடைய சொத்தை ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என்று பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் பத்தி 3–ல் வழக்கு சொத்து மெய்கால் புறம்போக்கு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. தோப்பு புறம்போக்கு என்று தான் குறிப்பிட்டுள்ளேன்.

3. என் அப்பா கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பாக என் பெயரில் தாவா சொத்தை செட்டில்மெண்ட் செய்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தின் புல எண்.106/2A என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்த போது என் அப்பா உயிருடன் இருந்தாரா? என்றால் இருந்தார். ஏன் என் அப்பாவை வாதியாக சேர்க்கவில்லை என்றால் வழக்கு சொத்தை நாங்கள் தான் அனுபவிக்கிறோம், அதனால் அவரை தரப்பினராக சேர்க்கவில்லை.

4. 1ம் வாதி இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். அவர் வேலைக்கு செல்வதால் அவரால் நீதிமன்றத்திற்கு வர முடியவில்லை. அவர் சார்பில் நான் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அனுமதி வழங்கி உள்ளரா? என்றால் வழங்கி உள்ளார். அனைவரின் சார்பில் நான் தான் வழக்கை நடத்துகிறேன். என் அப்பா இறப்பதற்கு முன்பாக பிரதிவாதியின் தந்தை தண்டபாணி என்பவருக்கு புல எண்.106/2B ல் 10 செண்டை கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியமா என்றால் அவர் அவ்வாறு எதுவும் கிரையம் கொடுக்கவில்லை.

5. என் அப்பா எவ்வாறு கையொப்பம் இடுவார் என்பது எனக்கு நினைவுள்ளதா? என்றால் நினைவு உள்ளது. பிரதிவாதியின் அம்மா ராணியம்மாள் என்பவர் புல எண்.106/2B ல் உள்ள மீத இருந்த 4 செண்ட் இடத்தை வீரபத்திரன், நாகூரான் ஆகியோருக்கு கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. நத்தம் செட்டில்மெண்ட் திட்டத்தின் போது என்னுடைய அம்மா பெயரில் தாவா சொத்திற்கு பட்டா இருந்ததாக என் வழக்குரையில் குறிப்பிட்டு

இருந்தேன் என்றால் ஆமாம். வருவாய் துறை அதிகாரிகள் அது சம்மந்தமாக விசாரணை நடத்தி என் அம்மா பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்துவிட்டார்கள் என்றால் அது சம்மந்தமாக உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து, உத்தரவு பெற்று, அந்த நடைமுறை தற்போது நிலுவையில் உள்ளது.

6. உயர் நீதிமன்ற மேற்படி உத்தரவை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. தாவா சொத்து எங்களுக்கு சொந்தமானது என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் வீட்டு வரி ரசீது, மின் கட்டண அட்டை, புகைப்படம் ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளோம். என்னுடைய அண்ணன் மனைவி சுகந்தி என்பவர் பெயரில் அதே புல எண்ணில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. அதனை என் தரப்பு ஆவணமாக குறியீடு செய்துள்ளேன். இந்த வழக்கு சொத்தின் புல எண்.106/2A என்றாலும், பிரதிவாதி புல எண். 106/2B சொத்தை தான் கிரையம் பெற்றுள்ளார் என்றாலும், எனவே, இவ்வழக்கு பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

7. என் அப்பா எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்த போது அவர் பெயரில் அரசு ஆவணங்கள் ஏதேனும் இருந்ததா என்றால் புறம்போக்கு இடம் என்பதால் அவ்வாறு எவ்வித ஆவணமும் இல்லை. நாங்கள் அதில் அனுபவத்தில் இருந்த வகையில் என் அப்பா எங்களுக்கே செட்டில்மெண்ட் கொடுத்தார். என் அப்பா தாவா சொத்தை எனக்கு ஒதுக்கியதை ஆவணம் மூலமாக செய்து கொடுத்தாரா? அல்லது வாய்மொழியாக செய்து கொடுத்தரா என்றால் வாய்மொழியாக தான் செய்து கொடுத்தார்.

8. புல எண்.106/2B, 155/7, 155/8, 155/10 என்று உட்பிரிவு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிக்கு சொந்தமான இடம் புல எண்.106/2B–ல் தான் உள்ளது என்றாலும் வழக்கு புல எண்ணில் அவரது சொத்து இல்லை என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

NILAVARASAN KASI
Digitally signed by NILAVARASAN KASI

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.